**செய்தி வெளியீடு எண்: 564** **நாள்: 31.07.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தலில், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் சட்டப்பேரவை உறுப்பினர்கள், முஸ்லிம் முன்னாள் பார்கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் முத்தவல்லிகள் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு காலியிடங்களுக்கான தேர்தல் கால அட்டவணை வெளியிடப்பட்டது. அந்த அட்டவணையின்படி 30.07.2020 அன்று தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டது. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் சட்டப்பேரவை உறுப்பினர்கள், மற்றும் முஸ்லிம் முன்னாள் பார்கவுன்சில் உறுப்பினர்கள் பிரிவில் கீழ்கண்ட நபர்கள் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள்:</u>

1. திரு. K. நவாஸ்கனி,
2. திரு. A.முகம்மது ஜான்

<u>முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள்:</u>

1. திரு K.A.M. முகமது அபுபக்கர்
2. திரு K.S மஸ்தான்

<u>முஸ்லிம் முன்னாள் பார்கவுன்சில் உறுப்பினர்கள்</u>

1. திரு M.K. கான்
2. திரு M. சையது இஸ்மாயில்

தேர்தலில் மேற்கண்ட ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு காலியிடங்களுக்கு, இரண்டு பேர் மட்டுமே போட்டியிடுவதால், தமிழ்நாடு வக்ஃப் வாரிய (உறுப்பினர்களுக்கு தேர்தல் நடத்துதல்) விதிகள், 1997, விதி–9 (6)–ன்படி இவர்கள் ஆறு பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

இரண்டு காலியிடங்களுக்கான முத்தவல்லி பிரிவில் தற்போது கீழ்கண்ட ஆறு நபர்கள் போட்டியிடுகின்றனர்;

<u>முத்தவல்லிகள்</u>

1. திரு P.M.S. அப்துல் கஃபூர்
2. திரு. A. அப்துல் ரஹ்மான்
3. திரு. G. குலாப் பாஷா
4. திரு. C.Y ஜாவித்அஹமத்
5. திரு. M. முஹம்மது பஷீர்
6. திரு. முஹம்மது முஜீபுர் ரஹ்மான்

ஏற்கனவே அறிவித்தபடி இவர்களுக்கான தேர்தல் **19.8.2020** அன்று நடைபெறும். இதற்கான வாக்குச் சாவடி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அலுவலகம் எண்.**1**, ஜாபர் சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை–**600 001** இல் அமைக்கப்படும்.

இத்தேர்தலில், வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை அஞ்சல் மூலமாக வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோவிட் **19**, கொரோனா வைரஸ் நோய் தொற்று காரணமாக தற்போதுள்ள ஊரடங்கு காலத்தில் முத்தவல்லி பிரிவைச் சேர்ந்த வாக்காளர்கள் இவ்வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**